## இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை - 2015

இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1956 இன் 11 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட இறப்பர் ஆராய்ச்சி கட்டளைகள் சட்டத்தின் (439 ஆவது அதிகாரம்) 8(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01**

நியமத்தின் மூலம் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது அனுமதி வழங்கப்பட்டவைகள் தவிர சொத்துக்கள் பொறுப்புக்களுக்கும், வருமானங்கள் செலவினங்களுக்கும் ஈடுசெய்ய முடியாதிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது கிடைக்க வேண்டிய ஏனைய மூலதன மானியம் ரூபா 12,826,235 உம், செலவினம் ரூபா 11,554,513 உம் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட்டு தேறிய பெறுமதி ரூபா 1,271,722 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**

(i) ஆண்டின் போது செலுத்தப்பட்ட ஊழியர் பணிக்கொடைப் பணம் ரூபா 1,040,400 காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டிற்காக இறப்பர் ஆரய்ச்சி நிறுவனத்திற்காக ரூபா 10,024,075 கூட்டுத்தொகை பணிக்கொடைக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 5,203,205 ஆக பிழையாகக் காண்பிக்கப்பட்ட காரணமாக, செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 4,820,870 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 08**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்திற்கு எதிராக ஊழியர்களினால் ரூபா 2,433,157 நட்டஈடு கோரி 11 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான ஒதுக்கங்களோ அல்லது வெளிப்படுத்தல்களோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மொனராகலை, குமாரவத்தை நாற்றுமேடை செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 4,950,638 தொகை மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நடைமுறை வேலையாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய செலவினங்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 830,937 தொகையான ஐய மற்றும் அறவிடமுடியாக் கடன் மீதி காரணமாக கடன்பட்டோர் மீதி அந்த அளவால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிறுவனத்தின் கடன்பட்டோர் பேரேட்டின் பிரகாரம் ரூபா 370,172 கூட்டுத்தொகையான 19 கடன்பட்டோர்களின் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களின் பிரகாரம் மீதி பூச்சியமாக இருந்ததாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 294,545,905 | நிலையான சொத்துப் பதிவேடு, பொருள் மெய்மையாய்வு அறிக்கை |
| (ஆ) | ஏனைய நிதிச் சொத்துக்கள் | 1,965,524 | வருடாந்த இருப்பு மெய்மையாய்வு அறிக்கை |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 13,717,213 கூட்டுத்தொகையான அறவிட வேண்டிய மீதிகளில் ரூபா 6,248,386 தொகை 7 வருடங்களை விஞ்சியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பேரேட்டில் காணப்பட்ட ரூபா 21,460,210 கூட்டுத்தொகையான வியாபாரக் கடன்பட்டோர் மீதிகளில் ரூபா 14,469,876 தொகை அதாவது 64 சதவீதம் 10 வருடங்களை விஞ்சியிருந்ததுடன் மேலும் ரூபா 4,636,295 தொகையான மீதி அதாவது 27 சதவீதம் 5 வருடங்கள் முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்டதாக இருந்தது. அந்தக் கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 8,713,223 கூட்டுத்தொகையான நானாவித கடன்பட்டோர் மீதியில் ரூபா 2,863,000 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதியாகும்.

(ஈ) 2011 ஆம் ஆண்டு முதல் தேசிய விஞ்ஞான மன்றத்திலிருந்து சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 1,035,600 தொகையினை அறவிடுவதற்கும், 2002 ஆம் ஆண்டு முதல் ஜனதா உரக் கம்பனிக்குச் செலுத்தவேண்டிய ரூபா 298,577 தொகையினை தீர்த்து வைப்பதற்கும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நானாவித கடன்பட்டோர் மீதியில் உள்ளடங்களியுள்ள ரூபா 16,643,553 கூட்டுத்தொகையான கடன் மீதிகளில் 10 வருடங்களை விஞ்சிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,324,179 ஆகவும், 5 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,900,115 ஆகவும், 2 இற்கும் 5 வருடங்களுக்கும் இடையிலான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 503,538 ஆகவும் இருந்தன.

(ஊ) பெறவேண்டிய மீதியின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 5,214,500 இனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | (i) நிதிப்பிரமாணம் 102, 103 | மீளாய்வாண்டின் இறுதியில் களஞ்சியப் பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் 29 விடயங்களின் பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 751 | அரசாங்க நிறுவனங்களுக்குக் கிடைக்கின்ற பொருட்கள் கிடைத்தவுடன் உடனடியாக பொருட் பதிவேட்டில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், செயற்திட்டங்கனிலிருந்து கிடைத்த ரூபா 3,967,781 கூட்டுத்தொகையான சொத்துக்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2010 திசெம்பர் 10 ஆந் திகதிய 1/2010 ஆம் இலக்க வர்த்தக தீர்வை வரி மற்றும் முதலீட்டுக் கொள்கைச் சுற்றறிக்கை | ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட தோட்ட அதிகாரியொருவருக்கு மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டமையினால், இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனத்திற்காக சுங்கவரி மற்றும் ஏனைய வரிச் சலுகையாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட ரூபா 8,090,574 தொகையான நட்டத்தை பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.12 ஆம் பந்தி | சபையில் அமுல்படுத்தப்படுகின்ற மருத்துவ வைத்தியப்படி பட்டியல்களை மீளளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிராகரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 36,662,486 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 43,971,568 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 7,309,802 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சம்பளச் செலவினம் ரூபா 80,346,675 இனால் அதிகரித்திருந்த போதிலும், அரசாங்க மானியம் ரூபா 89,796,800 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்தபோது 2011 ஆம் ஆண்டில் நிதி மிகையொன்று பெறப்பட்டிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையும் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்திற்கொள்ளும் போது சபையின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் குறைவடைந்திருந்த போதிலும், அதன் பின்னர் 2013 முதல் 2015 ஆம் ஆண்டு வரையும் சீராக அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சபைக்குச் சொந்தமான நான்கு தோட்டங்களில் மூன்று தோட்டங்கள் மீளாய்வாண்டின் போது நட்டத்தைப் பெற்றிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது ரூபா 4,750,647 தொகையான ஒட்டுமொத்த இலாபம் 167 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து ரூபா 3,199,674 ஆன நட்டமொன்றிற்கு உள்ளாகியிருந்தது. முன்னைய ஆண்டின் போது ரூபா 6,963,763 இலாபத்தைப் பெற்ற குருவிட்ட தோட்டத்தின் இலாபம் மீளாய்வாண்டின் போது 143 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து ரூபா 3,028,327 நட்டமொன்றாக மாறியிருந்தமை மேற்கூறப்பட்ட ஒட்டுமொத்த நட்டம் தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

எவ்வாறாயினும் முன்னைய ஆண்டின் போது இலாபத்தைப் பெற்ற டார்டன் பீல்ட் தோட்டத்தின் இலாபம் மாத்திரம் மீளாய்வாண்டின் போது 25 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் குமார தோட்டத்தின் நட்டம் 25 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

கீழே குறிப்பிடப்படுகின்ற துறைகள் தொடர்பாக விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சி முகாமைத்துவத்தை நடாத்திச் செல்லல், தைரியப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் என்பன சபையின் பிரதான நோக்கங்களாகும்.

* இறப்பர் மற்றும் இறப்பர் கைத்தொழில் தொடர்பாக சகல பிரச்சினைகளையும் தீர்த்தல்.

* இறப்பர் பயிர்ச் செய்கைக்கு/ இறப்பர் நாற்றுக்களின் பயிர்ச்செய்கைகளுக்கு தாக்கமளிக்கும் கிருமதித் தொற்றுக்கள் போன்ற நோய்களுக்கு சிகிச்சையளித்தல் மற்றும் தடுத்தல்.

* இறப்பர் பால் சந்தைக்கு ஈடுகொடுக்கும் வகையில் மாற்றுதல்/ பயன்படுத்துதல்.

* இறப்பர் மற்றும் இறப்பர் பயிர்ச்செய்கையிலிருந்து பெறப்படுகின்ற சகல உற்பத்திகளினதும் பயன்பாடு, சந்தைப்படுத்தல், அகற்றுதல்.

**4.2 நிதியத்தின் பயன்பாடு**

மூலதன நிதி ஏற்பாட்டின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 87.6 மில்லியனில் 55 சதவீதமான ரூபா 48.49 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. டார்டன்பீல்ட், நிவித்திகல கெலே தோட்டங்களின் வீதிகளை பழுதுபார்ப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் கட்டிட நிர்மாணத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 18.5 மில்லியனில் 30 சதவீதமான அதாவது ரூபா 5.48 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

**4.3 முகாமைத்துவ செயற்பாடுகள்**

2005 ஆகஸ்ட் மாதத்தின் போது உதவி இறப்பர் இரசாயனயாளர் சேவைக்கு சேர்க்கப்பட்ட பெண் உத்தியோகத்தருக்கு அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு விடுமுறை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 ஒக்தோபர் 25 ஆந் திகதி முதல் 1 வருடமும் 10 மாதங்களும் முழுச் சம்பளத்துடன் கற்கை விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறை முடிவடைந்ததன் பின்னர் 2009 ஒக்தோபர் 21 ஆந் திகதி முதல் மீண்டும் சேவைக்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதும், தாபனவிதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவின் பிரகாரம் பூரணப்படுத்தப்பட வேண்டிய கட்டாய சேவைக் காலம் அல்லது பிணைமுறியின் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2011 யூன் 01 ஆந் திகதி முதல் வேலைவாய்மொன்றிற்காக 06 மாதம் சம்பளமற்ற விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீண்டும் 2012 பெப்ரவரி 20 முதல் 02 சந்தர்ப்பங்களில் சம்பளத்துடனும் சம்பளமற்ற வகையிலும் விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் 2016 மார்ச் மாதத்தின் போது அங்கீகரிக்கப்பட்ட விடுமுறை முடிவடைந்திருந்தது. எவ்வாறாயினும் 2016 ஒக்தோபர் வரையிலும் சேவைக்கு அறிக்கையிடாதிருந்ததுடன் தாபன விதிக்கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 7.1 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 பதவியணியினர் நிர்வாகம்**

நிறுவகத்தின் கோட்பாடு மற்றும் கிளை இனவிருத்தி துறை மற்றும் Polymer Chemistry துறையின் தலைவர் பதவியைக் கையளிக்கும் கடமைக்காக நிரந்தர உத்தியோகத்தரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பதில் கடமை அடிப்படையில் இரண்டு உத்தியோகத்தர்களை நியமித்து அவர்களுக்காக ரூபா 723,528 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கொள்வனவு மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இறப்பர் பால் வெட்டும் கத்தியொன்றை வடிவமைப்பதற்காக நிறுவகத்தினால் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதனை உற்பத்தி செய்வதற்காக கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றாமல் தனியார் நிறுவனத்திற்கு தொடர்ச்சியாக கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. மேலும் நிறுவனத்தின் நோக்கங்களுக்கு முரணாக இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நிதியினைப் பயன்படுத்தி இந்த இறப்பர் பால் வெட்டும் கத்தி ரூபா 550 இற்கு கொள்வனவு செய்யப்பட்டு இலாப வீதமொன்று வைக்கப்பட்டு மீண்டும் ரூபா 565 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(ஆ) வாகனத் தரிப்பிடத்துடன் அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் கொள்வனவுக் குழு தீர்மானமின்றி ரூபா 9,950,719 தொகைக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

**5.3 கணக்காய்வுக் குழு**

2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 12 இல் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் 03 மாதங்களுக்கு ஒரு தடவை குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 02 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட/ கிடைத்த சந்தர்ப்பத்திலே பதிவேடுகளுக்கு கொண்டு வரல் மற்றும் பௌதீக மெய்மையாய்வின் மூலம் சொத்துக்களின் இருப்பினை உறுதிப்படுத்த முடியாமை. |
| (ஆ) | கொள்வனவு நடைமுறைகள் | கொள்வனவு வழிகாட்டிக் கோவை பின்பற்றப்படாமை |